# 9 வங்கிக் கணக்கும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றும்




இவ் அத்தியாயத்தில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படும்.

9.1 வங்கிக் கணக்கு

- வங்கிக் கணக்கில் காசு வைப்பிலிடுவதைப் பதிவு செய்தல்
- வங்கிக் கணக்கில் காசோலைகள் வைப்பிலிடுவதைப் பதிவு செய்தல்
- கொடுப்பனவுகளுக்காகக் காசோலைகள் வழங்கல்
- காசோலைகள் மறுக்கப்படுதல்
- வங்கி மேலதிகப் பற்று

9.2 வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

- வங்கிக் கூற்று
- வணிகமொன்றின் வங்கிக் கூற்று மீதியும் காசேட்டு வங்கிக் கணக்கு மீதியும் வேறுபடுவதற்கான காரணங்கள்
- வங்கிக் கணக்கு மீதியைச் சீராக்குதல்
- வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரித்தல்

## 9.1 வங்கிக் கணக்கு

வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களை இலகுவாகவும் பாதுகாப்புடனும் மேற்கொள்வதற்காக வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பித்து அக்கணக்கினூடாகக் கொடுக்கல் வாங்கல்கள் செய்வதில் அநேக வணிகர்கள் அதிக அக்கறை கொண்டுள்ளனர். எனவே, காசேட்டைப் போன்றே வங்கி நடைமுறைக் கணக்கும் வணிகத்தின் சொத்துக்கணக்காகக் கருதப்படும். வங்கிக் கணக்கினூடாக மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக் கணக்குகளுக்குரிய இரட்டைப் பதிவுத் தத்துவத்திற்கமையப் பதிவு செய்யப்படுகின்றன.

வங்கி நடைமுறைக் கணக்கினூடாக மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் வணிகத்தின் புத்தகங்களில் பதிவு செய்யும் முறையினை அறிந்து கொள்வோம்.

### 01. வங்கிக் கணக்கில் காசு வைப்பிலிடுவதைப் பதிவுசெய்தல்.

நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்குக் குறிப்பிட்ட பணத் தொகையை வங்கியில் வைப்பிலிடுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக வணிகத்தினது காசுப் பெறுவனவுகளும் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும். நடைமுறைக் கணக்கில் பணத்தை வைப்பிலிடும்போது வங்கி நடைமுறைக் கணக்கின் மீதியானது அதிகரிப்பதுடன் வணிகத்தினது காசு மீதியில் குறைவொன்று ஏற்படுகின்றது.

இதற்கமைய, காசு வைப்பிலிடுதல் தொடர்பான கணக்கு வைத்தல் முறையானது பின்வருமாறு இடம்பெறும்.

| | |
|---|---|
| வங்கிக் கணக்கு | வரவு |
| காசுக்கணக்கு | செலவு |

இவ்வாறு பதிவு இடம்பெறும்போது அதன் இரட்டைப் பதிவானது முழுமையடைகின்றது.

வங்கியில் காசு வைப்பிலிடும்போது வைப்புச் சீட்டைப் பூரணப்படுத்தி அதனுடன் குறித்த பணத்தொகையையும் வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். வங்கியானது இரு பிரதிகளைக் கொண்ட வைப்புச்சீட்டின் ஒரு பிரதியை நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளருக்கு அச்சந்தர்ப்பத்தில் வழங்கும். வணிகத்தினால் வங்கியில் வைப்பிலிடப்பட்ட தொகையைப் பதிவுசெய்யும்போது அப்பிரதியை மூல ஆவணமொன்றாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## 02. வங்கிக் கணக்கில் காசோலை வைப்பிலிடுவதைப் பதிவு செய்தல்.

காசோலைகளை வைப்பிலிடுவதன் காரணமாக வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி அதிகரிக்கும். கடன்பட்டோர்களிடமிருந்தும் உடன் காசு விற்பனைகள் மூலமும் காசோலைகள் கிடைக்கப் பெறும். காசோலைகள் கிடைத்த சந்தர்ப்பத்தில் முதலாவதாகக் காசுக்கணக்கில் வரவு வைக்கப்படும் என்பது இதற்கு முன்னர் விளக்கப்பட்டுள்ளது. அவ்வாறு காசேட்டில் வரவு வைக்கப்பட்ட காசோலைகளைப் பின்னர் வங்கியில் வைப்புச் செய்கின்றபோது பின்வரும் முறையில் இரட்டைப்பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | |
|---|---|
| வங்கிக் கணக்கு | வரவு |
| காசுக் கணக்கு | செலவு |

எனினும், காசோலை கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பத்திலேயே அவை வங்கியில் வைப்புச் செய்யப்படுமாயின் காசுக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக நேரடியாக வணிகத்தின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கமுடியும்.

உதாரணம் :-


விற்பனை மூலம் பெற்ற ரூ. 10 000 பெறுமதியான காசோலை அச்சந்தர்ப் பத்திலேயே வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

அப்போது இரட்டைப் பதிவானது பின்வருமாறு அமையும்.

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | வரவு | 10 000 |
| விற்பனைக் கணக்கு | செலவு | 10 000 |

கிடைக்கப் பெறும் காசோலைகளை வங்கியில் வைப்புச் செய்யும்போது வைப்புச் சீட்டைப் பூரணப்படுத்தி அதனுடன் காசோலைகளையும் வங்கியில் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வைப்புச் சீட்டின் பிரதி வங்கியினால் கணக்கு வாடிக்கையாளருக்கு வழங்கப்படும். அவ்வாடிக்கையாளரது வணிகத்தின் வங்கிக் கணக்கில் காசோலை வைப்புச் செய்வதற்குரிய பதிவினை மேற்கொள்ளும்போது வைப்புச்சீட்டின் பிரதி மூல ஆவணமொன்றாகப் பயன்படுத்தப்படும்.

காசு அல்லது காசோலைகள் வைப்புச் செய்வதன் மூலம் பெறப்பட்ட வைப்புச் சீட்டின் பிரதியொன்று கீழே காட்டப்பட்டுள்ளது. அதில் கவனஞ் செலுத்தவும்.


மஹජන බැංකුව
மக்கள் வங்கி PEOPLE'S BANK

OFFICE COPY

චෙක් තැන්පතු තුණ්ඩුව
காசோலை வைப்புச்சீட்டு CHEQUE PAYING - IN SLIP

ආප. ப.இ. FORM 214 DP

ශාඛා සංකේතය හා ගිණුම් අංකය கிளை இலக்கமும் கணக்கு இலக்கமும் BRANCH CODE AND ACCOUNT NO.

දිනය திகதி DATE

PAID INTO CREDIT OF

ගිණුමේ බැරට ගෙවන ලදී
கணக்கின் வரவுக்குச் செலுத்தப்பட்டது.

ගණන අකුරින் தொகை எழுத்தில் AMOUNT IN WORDS රු. ரூ RS.

චෙක්පත් සංඛ්‍යාව காசோலைகளின் எண்ணிக்கை NO OF CHEQUES

| බැංකුවේ /ශාඛාවේ සංකේත අංකය வங்கியின் /கிளையின் குறியீட்டு இல. BANK / BRANCH CODE NO. | චෙක් අංකය காசோலை இல. CHEQUE No. | රුපියල් ரூபா. RS. | ශත சதம் CTS. |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| එකතුව மொத்தம் TOTAL | | | |

තැන්පත්කරු வைப்பாளர் DEPOSITOR

මුදල් භාරකරු காசாளர் CASHIER

නිලධාරි உத்தியோகத்தர் OFFICER

මෙම ඉරට පහළින් කිසිවක් නොලියන්න இக் கோட்டுக்குக் கீழே எதுவும் எழுதாதீர்கள் DO NOT WRITE ANYTHING BELOW THIS LINE


PRINTLAND 06-09-07

காசு அல்லது காசோலைகள் வைப்பிலிடுவதற்கான மாதிரி வைப்புச் சீட்டு

## 03. கொடுப்பனவுகளுக்காகக் காசோலைகள் வழங்குதல்

கடன்கொடுனர்களுக்கான கொடுப்பனவுகள், கொள்வனவுகள், செலவினங்கள் போன்றவைகளுக்காகக் காசோலைகள் வழங்கப்படுவதன் மூலம் கொடுப்பன வுகளை மேற்கொள்ள முடியும். காசோலைகள் வழங்கும்போது அவற்றைப் பூரணப்படுத்தி அதற்குரிய தகவல்களைக் காசோலைப் புத்தகத்தில் எஞ்சியுள்ள சிறிய பகுதியொன்றான அடியிதழில் குறிப்பிட்டதன் பின்னர் வழங்கப் படுவது பொதுவாக இடம்பெறும் நிகழ்வாகும். கீழே காணப்படும் காசோ லையின் மாதிரியில் பகுதி I இல் அடியிதழும் II இல் பகுதியில் காசோ லையும் காணப்படுகின்றது. அதனை அவதானிப்பதில் கவனஞ்செலுத்தவும்.

I அடியிதழ் II காசோலை இதழ்


Date දිනය திகதி 05-01-2014
Payer ආදායකයා සහන් අබේනායක
ජනවාරි මාසයේ භාණ්ඩ
මිලදී ගැනීම සඳහා

Balance B/F ශේෂය ප/ගෙ

Deposits තැන්පතු

This cheque මෙම චෙක්පත රු. 15,000/-

Balance C/F ශේෂය ඉ/ගෙ

210200

BOC

පස්වෙනි නගර ශාඛාව
FIFTH CITY BRANCH

දිනය Date 0 5 0 1 1 4
D D M M Y Y

Pay සහන් අබේනායක හෝ රැගෙන එන්නාට Or Bearer

රුපියල් Rupees පහළොස් දහසක් පමණක් රු. Rs. රු. 15,000/-

ගෙවනු

රුවන් කුලරත්න

⑈210200⑈ 7010⑉060⑆ 0002323980⑈

மாதிரிக் காசோலை

காசோலைகள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது அக் கொடுப்பனவு களுக்குரிய தகவல்கள் கொடுப்பனவுக் கைச்சாத்தில் பதிவு செய்யப்படும். இதற்கமைய, காசோலைகள் மூலம் மேற்கொள்ளும் கொடுப்பனவுகளை வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படும்போது கொடுப்பனவுக் கைச்சாத்து (வவுச்சர்) மூல ஆவணமொன்றாகப் பயன்படுத்தப்படும்.

காசோலைகள் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளும்போது வங்கிக் கணக்கினது மீதி குறைவடையும். இதற்குரிய இரட்டைப்பதிவு பின்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| செலவுக் கணக்கு அல்லது கொடுப்பனவுக்குரிய கணக்கு | வரவு |
| வங்கிக் கணக்கு | செலவு |

### 04. காசோலைகள் மறுக்கப்படுதல்

முறையற்ற வகையில் காசோலை எழுதுதல். நடைமுறைக்கணக்கில் காசு இல்லா திருத்தல், காசோலையிலுள்ள கையொப்பமானது மாதிரிக் கையொப்பத்தினின்றும் வேறுபட்டிருத்தல் போன்றவைகள் காரணமாக வங்கியினால் காசோலைக்குப் பணம் வசூலித்தல் அல்லது கொடுப்பனவு செய்தல் நிறுத்தப்படும். இதனையே காசோலை கள் மறுக்கப்படுதல் என அழைக்கப்படும்.

இதற்கமைய, வைப்பிலிடப்பட்ட காசோலைகளைப்போன்று வழங்கப்பட்ட காசோலைகளும் கூட மறுக்கப்பட முடியும். மறுக்கப்படுவதற்குரிய அறிவித்தலொன்று வங்கி மூலம் வணிகத்திற்கு (நடைமுறைக் கணக்குரிமையாளருக்கு) அனுப்பப்படும்.

மறுக்கப்பட்ட காசோலையின் அறிவித்தலொன்றின் மாதிரி தரப்பட்டுள்ளது. அதில் கவனஞ் செலுத்தவும்.

**வைப்பிலிடப்பட்ட காசோலைகள் மறுக்கப்படல்**

உடன் காசு விற்பனைகள் மூலம், கடன்பட்டோர்களிடமிருந்து போன்ற வகைகளில் பெறப்படும் காசோலைகள் வங்கியில் வைப்பு செய்யப்படும் அதே வேளை வணிகத் தினால் அப் பெறுமானங்கள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். இவ்வைப்புக்கள் மூலம் வங்கிக் கணக்கு மீதி அதிகரிப்பதனாலேயே அவ்வாறு வரவு வைக்கப்படுகின்றது. ஆயினும் வங்கியினால் இக்காசோலைகள் மறுக்கப்படுகின்றபோது உண்மையில் வங்கி மீதியில் அதிகரிப்பேற்படுவதில்லை. ஆகையால், வைப்பிலிடப்பட்ட சந்தர்ப்பத்தின் போது வரவு வைக்கப்பட்ட பதிவினை நீக்குதல் வேண்டும். இங்கு, வங்கிக் கணக்கில் மறுக்கப்பட்ட காசோலையின் பெறுமதி காசோலையை வழங்கியவரிடமிருந்து மீள அறவிட்டுக்கொள்ள வேண்டிய தொகையாகக் காட்டுதல் வேண்டும். இதற்கமைய வைப்பிலிடப்பட்டு மறுக்கப்பட்ட காசோலைகளினது பெறுமதிகளைப் பின்வரும் முறையில் பதிவுசெய்ய வேண்டும்.

| | |
|---|---|
| கடன்பட்டோர் கணக்கு | வரவு |
| வங்கிக் கணக்கு | செலவு |

Retained by Customer

අගරු චෙක්පත් නිවේදනය
மறுக்கப்பட்ட காசோலை அறிவிப்பு
**Cheque Return Notification**

මීන සම්පිණ්ඩනය කළ හැකි විට, අගරු වූ චෙක්පත වෙනුවට භාවිතා කළ හැක
மீள சமர்ப்பிக்கக்கூடியதாயின், மறுக்கப்பட்ட காசோலைக்கு பதிலாக பாவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது
Permitted to use as a replacement for the returned cheque, if representable

PART-A
Customer's Copy

9999 00032732

LCPL - Matara

Date: 25-May-2006

Collecting Bank: **Peoples Bank**

| Bank's Use | අගරු චෙක් පතේ විස්තර / திருப்பி அனுப்பும் காசோலையின் விபரம் / **Cheque Return Information** | |
|---|---|---|
| | චෙක්පත් අංකය / காசோலை இலக்கம் / Cheque Number | : 654298 |
| | ගෙවන බැංකුව / செலுத்தும் வங்கி / Paying Bank | : Peoples Bank |
| | වටිනාකම (රු) / தொகை (ரூபா) / Amount (Rs.) | : 3,500.00 |
| | ගිණුම් අංකය / கணக்கு இலக்கம் / Account Number | : |
| | UI නොම්මරය / UI இலக்கம் / UI Number | : 20060523713530704107400015 |
| | අගරු වීමට හේතුව (සංකේතය) / திருப்பி அனுப்பப்படுவதற்கான காரணம் (குறியீடு) / Return Reason (Code) | : Payment Postponed Pending Drawer's Confirmation(14) |
| Authorized Bank's Signature | | |

CANCELLED 15 MAY 2006 LANKACLEAR (PVT) LTD. MATARA. RSC

---

Retained by Collecting Bank when represented

## Cheque Clearing Information

CITS

PART-B
Bank's Copy

9999 00032732

LCPL - Matara

Date: 25-May-2006

Collecting Bank: **Peoples Bank**

**Cheque Information**

| | | | |
|---|---|---|---|
| **UI Number** | : 20060523713530704107400015 | **First Presentment Date :** | 23-May-2006 |
| **Amount (Rs.)** | : 3,500.00 | **Paying Bank** | : Peoples Bank |
| **Cheque Number** | : 654298 | **Paying Branch** | : Urubokka |

INSTRUCTIONS FOR RE-PRESENTMENT

**First Return - This CRN can be re-presented only to the original presenting bank subject to conditions.**

| **Clearing Information** | **First Return** | **Second Return** |
|---|---|---|
| Return Reason/Code | Payment Postponed Pending Drawer's Confirmation(14) | |
| Collecting Branch | Gandara | |
| Collecting LCPL Center | Matara | |
| Date of Return | 25-May-2006 | |

CANCELLED 15 MAY 2006 LANKACLEAR (PVT) LTD. MATARA. RSC

**Conditions**

1. CRN with any mutilation or tear will not be accepted.
2. CRN is not negotiable and cannot be encashed.
3. To be presented within 6 months of 1st presentment date or cheque date, whichever is earlier.

---

Forwarded for Cheque Clearing by Collecting Bank

THIS IS A TRUE COPY OF THE ORIGINAL CHEQUE

CITS

Cheque Status: **Re-presentable**

PART-C
Bank's Copy


9999 00032732

LCPL - Matara

Date: 25-May-2006

Collecting Bank: **Peoples Bank**

Front Image of Returned Cheque



For Endorsements

CANCELLED 15 MAY 2006 LANKACLEAR (PVT) LTD. MATARA. RSC

20060523 7135307 04 10740015 3,500.00

*மறுக்கப்பட்ட காசோலை அறிவிப்பு மாதிரிப் படிவம்*

உதாரணம் :-

கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ. 8 000 பெறுமதியான காசோலையொன்று மறுக்கப் பட்டுள்ளது என வங்கியால் அறிவிக்கப்பட்டது.

இங்கு வைப்பிலிட்டு மறுக்கப்பட்ட காசோலையின் பெறுமானத்தைப் பதிவு செய்வ தற்குரிய இரட்டைப் பதிவு பின்வருமாறு மேற்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| கடன்பட்டோர் கணக்கு | வரவு | ரூ. 8 000 |
| வங்கிக் கணக்கு | செலவு | ரூ. 8 000 |

**வழங்கப்பட்ட காசோலை மறுக்கப்படல்**

காசோலைகள் வழங்கும் பொழுது குறித்த செலவினக் கணக்கு வரவு அல்லது குறித்த வேறு கணக்கு வரவு வைக்கப்பட்டு வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்படல் வேண்டும் என இதற்கு முன்னர் கலந்துரையாடப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட காசோலைகள் மறுக்கப்படும்போது ஏற்கனவே வங்கிக் கணக்கிலுள்ள பதிவு நீக்கப்படுதல் வேண்டும். இதனைக் காசோலை வழங்கும்போது பதிவு செய்யப்பட்ட பதிவிற்கு எதிர்ப்பக்கப் பதிவு மூலம் நீக்கப்படும்.இதற்கமைய வழங்கப்பட்ட காசோ லைகள் மறுக்கப்படும்போது பின்வருமாறு பதிவு செய்யப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| வங்கிக் கணக்கு | வரவு |
| குறித்தசெலவினக் கணக்கு / ஏனைய கணக்கு | செலவு |

உதாரணம் :-

கடன்கொடுத்தோருக்காக வணிகத்தினால் வழங்கப்பட்ட ரூ. 15 000 பெறுமதியான காசோலை ஒன்று மறுக்கப்பட்டுள்ளது என வங்கியால் அறிவிக்கப்படல்.

மறுக்கப்பட்ட காசோலைக்கான இரட்டைப்பதிவு பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | வரவு | ரூ. 15 000 |
| கடன் கொடுத்தோர் கணக்கு | செலவு | ரூ. 15 000 |

உதாரணம் :-

20XX.06.01 நல்லையா வணிகத்தில் பின்வருமாறு மீதிகள் காணப்பட்டன.

| | ரூ. |
|---|---|
| காசு | 185 000 |
| கடன்பட்டோர் | 55 000 |
| கடன்கொடுத்தோர் | 85 000 |

ஜுன் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| 20XX.06.02 | வங்கியில் ரூ. 22 000 வைப்புச் செய்யப்பட்டு நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது |
| 06.03 | கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து 455 ஆம் இலக்கம் கொண்ட ரூ. 9 000 பெறுமதியான காசோலை கிடைக்கப்பெற்றது. |
| 06.04 | கடன்பட்டோரிடமிருந்து கிடைக்கப் பெற்ற 455 ஆம் இலக்கம் கொண்ட காசோலை ரூ. 9 000 வங்கியில் வைப்பிலிடப்பட்டது. |
| 06.08 | விற்பனைக்காகக் கிடைக்கப் பெற்ற 562 ஆம் இலக்கம் கொண்ட ரூ. 12 000 பெறுமதியான காசோலை ஒன்று அச்சந்தர்ப்பத்திலேயே வங்கியில் வைப்பிலிடப்பட்டது. |
| 06.12 | காசாக ரூ. 15 000 வங்கி நடைமுறைக்கணக்கில் வைப்பிலிடப்பட்டது. |
| 06.15 | 301 ஆம் இலக்கம் கொண்ட ரூ. 7 600 பெறுமதியான காசோலையொன்று கடன் கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்டது. இதற்கு ரூ. 400 கழிவாகப் பெறப்பட்டது. |
| 06.18 | மின்சாரக் கட்டணமாக 302 ஆம் இலக்கம் கொண்ட ரூ. 5 000 பெறுமதியான காசோலை ஒன்று வழங்கப்பட்டது. |
| 06.20 | மின்சாரக் கட்டணத்திற்காக வழங்கப்பட்ட ரூ.5 000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டது. |
| 06.24 | 415 ஆம் இலக்கம் கொண்ட ரூ. 13 000 பெறுமதியான காசோலையொன்று கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்டது. |
| 06.26 | கடன்பட்டோரிடமிருந்து பெற்ற 415 ஆம் இலக்கம் கொண்ட காசோலை வங்கியில் வைப்பிலிடப்பட்டது. |
| 06.28 | வங்கியில் வைப்பிலிடப்பட்ட 415 ஆம் இலக்கம் கொண்ட காசோலை மறுக்கப்பட்டது. |
| 06.29 | கடன்பட்டோரிடமிருந்து 632 ஆம் இலக்கம் கொண்ட ரூ. 5 700 பெறுமதியான காசோலையொன்று பெறப்படல். இதில் அனுமதிக்கப்பட்ட கழிவு ரூ. 300 ஆகும். இக்காசோலை அச்சந்தர்ப்பத்திலே வங்கியில் வைப்பிலிடப்பட்டது. |

இக்கொடுக்கல் வாங்கல்கள் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படும் முறையினையும் குறித்த ஏனைய கணக்குகளில் பதிவு செய்யும் முறையினையும் பின்வருமாறு காட்டமுடியும்.

வரவு | வங்கிக் கணக்கு | செலவு

| திகதி | விபரம் | பே ப. | கழிவு | தொகை. ரூ. | திகதி | விபரம் | பே ப.. | கழிவு | தொகை. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20XX.06.02 | காசு | | | 22 000 | 20XX.06.15 | கடன்கொடுனர்( (301) | | 400 | 7 600 |
| 06.04 | காசு (455) | | | 9 000 | 06.18 | மின்சாரம் (302) | | | 5 000 |
| 06.08 | விற்பனைகள் (562) | | | 12 000 | 06.28 | கடன்பட்டோர் (415) | | | 13 000 |
| 06.12 | காசு | | | 15 000 | | | | | |
| 06.20 | மின்சாரம் (302) | | | 5 000 | | | | | |
| 06.26 | காசு (415) | | | 13 000 | | | | | |
| 06.29 | கடன்பட்டோர் (632) | | 300 | 5 700 | | | | | |

வரவு | காசுக் கணக்கு | செலவு

| திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. | திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 20XX.06.01 | மீ.கீ.கொ.வ | | 185 000 | 20XX.06.02 | வங்கி | | 22 000 |
| 06.03 | கடன்பட்டோர் | | 9 000 | 06.04 | வங்கி | | 9 000 |
| 06.24 | கடன்பட்டோர் (415) | | 13 000 | 06.12 | வங்கி | | 15 000 |
| | | | | 06.26 | வங்கி (415) | | 13 000 |

வரவு | கடன்பட்டோர் கணக்கு | செலவு

| திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. | திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 20XX.06.01 | மீ.கீ.கொ.வ | | 55 000 | 20XX.06.03 | காசு | | 9 000 |
| 06.28 | மறுக்கப்பட்ட காசோலை | | 13 000 | 06.24 | காசு கா.இ 415 | | 13 000 |
| | | | | 06.29 | வங்கி | | 5 700 |
| | | | | 06.29 | கழிவு | | 300 |

வரவு | கடன்கொடுத்தோர் கணக்கு | செலவு

| திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. | திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 20XX.06.15 | வங்கி | | 7 600 | 20XX.06.01 | மீ.கீ.கொ.வ | | 85 000 |
| 06.15 | கழிவு | | 400 | | | | |

வரவு | விற்பனைக் கணக்கு | செலவு

| திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. | திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 20XX.06.08 | வங்கி | | 12 000 |

வரவு　　　　　　　　　　　　மின்சாரக் கணக்கு　　　　　　　　　　　　செலவு

| திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. | திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 20XX.06.18 | வங்கி | | 5 000 | 20XX.06.20 | வங்கி (மறுக்கப்பட்ட காசோலை) | | 5 000 |

வரவு　　　　　　　　　　　　கொடுத்தகழிவுக் கணக்கு　　　　　　　　　　　　செலவு

| திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. | திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 20XX.06.30 | கடன்பட்டோர் | | 300 | | | | |

வரவு　　　　　　　　　　　　பெற்ற கழிவுக் கணக்கு　　　　　　　　　　　　செலவு

| திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. | திகதி | விபரம் | பே ப. | தொகை. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 20XX.06.30 | கடன்கொடுத்தோர் | | 400 |



## செயற்பாடு 01

சாகிர் வணிகத்தின் 2XXX-06-01 ஆம் திகதியன்று காணப்பட்ட மீதிகள் பின்வருமாறு

| | ரூ. |
|---|---|
| காசு | 90 000 |
| கடன்பட்டோர் | 60 000 |
| மூலதனம் | 70 000 |
| கடன் கொடுத்தோர் | 80 000 |

20XX ஜுன் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

20XX.06.05　ரூ. 25 000வைப்பிலிட்டு வங்கியில் நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது.

06.08　40ஆம் இலக்கம் கொண்ட ரூ.20 000 பெறுமதியான காசோலையொன்று வழங்கப்பட்டுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன

06.10　பின்வரும் காசோலைகள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டன கடன்பட்டோரிடமிருந்து பெற்ற 68 ஆம் இலக்கம் கொண்ட ரூ.12 000 பெறுமதியான காசோலை.

விற்பனை மூலம் பெறப்பட்ட இலக்கம் 75 ஐ கொண்ட ரூ. 18 000 பெறுமதியான காசோலை.

கடன்பட்டோரிடமிருந்து பெற்ற இல 66 ஐ கொண்ட ரூ. 18 000 பெறுமதி யான காசோலை.

06.15 காசாக ரூ. 10 000 வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

06.16 கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்டு வங்கியில் வைப்புச் செய்யப் பட்ட ரூ. 12 000 பெறுமதியான 68 ஆம் இலக்க காசோலை மறுக்கப் பட்டது.

06.20 பின்வரும் இலக்கங்கள் கொண்ட காசோலைகள் வழங்கப்பட்டன.
வாடகைக்கு வழங்கிய 41 ஆம் இலக்கம் கொண்ட ரூ. 8 000 பெறுமதி யான காசோலை.
கடன் கொடுத்தோருக்கு வழங்கிய 42ஆம் இலக்கம் கொண்ட ரூ. 15000 பெறுமதியான காசோலை

06.24 வாடகைக்காக வழங்கிய ரூ. 8000 பெறுமதியான காசோலை மறுக்கப் பட்டது.

06.26 வாடகைக்காக வழங்கிய மறுக்கப்பட்ட காசோலைக்குப் பதிலாக 43 ஆம் இலக்கம் கொண்ட ரூ. 8 000 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.

06.27 விற்பனைகள் மூலம் பெற்ற 105ஆம் இலக்கம் கொண்ட ரூ. 21 000 பெறுமதியான காசோலை அன்றைய தினமே வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

(1) 20XX.06.30முடிவடைந்த மாதத்திற்கான வங்கிக் கணக்கினைத் தயாரித்துச் சமப்படுத்தவும்.
(2) ஏனைய பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்து சமப்படுத்தவும்.

## வங்கி மேலதிகப்பற்று

வங்கி நடைமுறைக் கணக்கில் தற்போது காணப்படும் மீதியிலும் பார்க்கக் கூடுதலான தொகைக்குக் காசோலைகளை வழங்க நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளருக்கு வங்கிகள் அனுமதிக்கலாம். இத்தகைய வசதியே வங்கி மேலதிகப் பற்று என அழைக்கப்படும். இதற்கமைய வணிகத்தினால் வங்கிக் கணக்கிலுள்ள மீதியின் அளவையும் விட மேலதிகமான தொகைகளுக்குக் காசோலைகள் வழங்கப்படும்போது வங்கிக் கணக்கின் வரவுப் பக்கத்தின் கூட்டுத்தொகையை விட அதன் செலவுப் பக்கக் கூட்டுத்தொகை அதிகமாக இருப்பதன் காரணமாக வங்கிக் கணக்கு செலவு

மீதியொன்றைக் காட்டும். இவ்வாறு காணப்படும் செலவு மீதி **''வங்கி மேலதிகப் பற்று''** எனக் குறிப்பிடப்படும். இது வணிகத்தின் ''பொறுப்பு'' ஒன்றாகக் கருதப்படும். இதற்கமைய கணக்கில் இருக்கும் மீதியை விட மேலதிகமான தொகைக்குக் காசோலைகளை வழங்கும்போது வங்கியானது அக் காசோலைகளுக்குக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதனால் கணக்குரிமையாளர் வங்கிக்குக் கடன்பட்டோராகக் கருதப்படுவார். இவ்வாறு வங்கிக் கூற்றில் காணப்படும் வரவுமீதி வங்கி மேலதிகப் பற்று என அழைக்கப்படும்.

உதாரணம் :-

20XX.07.01 ஆம் திகதியில் சாமிநாதனின் வணிகத்தின் வங்கிக் கணக்கில் சாதகமான மீதியாக (வரவு மீதி) ரூ. 12 000 இருந்தது. ஜுலை மாதத்தினுள் வங்கிக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

20XX.07.05 காசு வைப்பிலிடல் ரூ. 8 000

**வைப்பிலிடப்பட்ட பெற்ற காசோலைகள்**

20XX.07.08 விற்பனைகள் மூலம் பெற்ற காசோலை ரூ. 9 000
காசோலை இல.20

20XX.07.15 வாடகை வருமானத்திற்காகப் பெற்ற காசோலை ரூ. 7 000
காசோலை இல.114

20XX.07.20 கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசோலை ரூ. 6 000
காசோலை இல.95

**வழங்கப்பட்ட காசோலைகள்**

20XX.07.12 கடன் கொடுத்தோருக்கு ரூ. 16 000 கா. இல.33
20XX.07.22 ஊழியர் சம்பளத்திற்காக ரூ. 15 000 கா. இல.34
20XX.07.25 கொள்வனவுகளுக்காக ரூ. 25 000 கா. இல.35

மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்களை வங்கிக் கணக்கில் பதிவுசெய்து அதனைச் சமப்படுத்திய முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

வரவு வங்கிக் கணக்கு செலவு

| திகதி | விபரம் | பே. ப | தொகை ரூ | திகதி | விபரம் | பே. ப | தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 20XX.07.01 | மீ.கீ.கொ.வ . | | 12 000 | 20XX.07.12 | கடன் கொடுத்தோர்(33) | | 16 000 |
| 07.05 | காசு | | 8 000 | 07.22 | சம்பளம் (34) | | 15 000 |
| 07.08 | காசு (20) | | 9 000 | 07.25 | கொள்வனவுகள் (35) | | 25 000 |
| 07.15 | காசு (114) | | 7 000 | | | | |
| 07.20 | காசு (95) | | 6 000 | | | | |
| 07.31 | மீ.கீ.கொ.செ | | 14 000 | | | | |
| | | | 56 000 | | | | 56 000 |
| | | | | 08.01 | மீ.கீ.கொ.வ | | 14 000 |

மேற்காட்டிய உதாரணத்திற்கமைய வங்கிக் கணக்கின் செலவுப்பக்கக் கூட்டுத் தொகை ரூ. 56 000 ஆகவும் வரவுப்பக்க கூட்டுத்தொகை ரூபா 42 000 ஆகவும் இருந்தது. இதற்கமைய செலவுப்பக்கத்தின் கூட்டுத்தொகையைவிட வரவுப் பக்கத் தின் கூட்டுத்தொகை ரூ. 14 000 இனால் குறைவாக இருப்பதன் காரணமாக வங்கிக் கணக்கில் ரூ. 14 000 த்திலான செலவு மீதியொன்று கிடைக்கப் பெற்றுள்ளது. இது ''வங்கி மேலதிகப் பற்று'' எனக் குறிப்பிடப்படும். வங்கி மேலதிகப் பற்றினை மீள வங்கிக்குச் செலுத்துவதற்குக் கடப்பாடு இருப்பதனால் இதனை வணிகத்தின் பொறுப்பொன்றாகக் கருதமுடியும்.



## செயற்பாடு 02

விக்டர் என்பவர் ஆடை அணிகலன்களை விற்பனை செய்யும் வணிகமொன்றில் ஈடுபட்டுள்ளார். அவர் கொடுக்கல் வாங்கலைச் செய்வதற்காக வங்கி நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பித்ததுடன் நீண்ட காலமாக ஒழுங்கு முறைக்கமையக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுப்பட்டுள்ளமையால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ரூ. 100 000 வரையில் வங்கி மேலதிகப்பற்றினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியைப் பெற்றுள்ளார்.

20XX.05.01 ஆம் திகதியன்று அவரது வணிகத்தில் வங்கிக் கணக்கு மீதி ரூ.45 000 இருந்தது. மே மாதத்தில் அவரது வங்கி நடைமுறைக் கணக்கினூடாகக் மேற் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

**வைப்புக்கள்**

20XX.05.02 காசு ரூ. 14 000
05.11 காசோலை வைப்பு ரூ. 15 000
05.21 காசோலை வைப்பு ரூ. 16 000

**வழங்கப்பட்ட காசோலை**

05.05 கடன் கொடுத்தவரொருவரான அகிலுக்கு ரூ. 12 000
05.13 சம்பளக் கொடுப்பனவுகள் ரூ. 20 000
05.18 நிறுவன வாடகை ரூ. 10 000
05.22 கொள்வனவுக்காக ரூ. 34 000

வைப்பிலிடப்பட்ட அனைத்துக் காசோலைகளும் வங்கி நடைமுறைக் கணக்கில் சேர்க்கப்பட்டிருந்ததோடு வழங்கப்பட்ட காசோலைகளது தொகைகள் வங்கி நடைமுறைக் கணக்கிலிருந்து கழிப்பனவு செய்யப்பட்டது.

01. மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்களை வங்கிக் கணக்கில் பதிவு செய்து அதனைச் சமப்படுத்திக் காட்டுக.

02. 20XX.05.25 உபகரணக் கொள்வனவுக்காக ரூ.45 000 பெறுமதியான காசோலையொன்று வழங்கப்பட்டிருப்பின் அவரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வங்கி மேலதிகப் பற்று எவ்வளவு என்பதைக் காட்டுக.

## 9.2 வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

வணிகமொன்று வங்கி நடைமுறைக் கணக்கினூடாக மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் அதனது வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படும் முறையினை நீங்கள் இதற்கு முன்னர் கற்றுள்ளீர்கள். வணிகத்தின் பெயரில் வங்கிக் கணக்கில் இருக்கும் மீதியானது வணிகத்தினது சொத்தொன்றாகக் கருதப்படும். எனவே, வணிகத்தின் ஏடுகளில் காணப்படும் வங்கிக் கணக்கானது சொத்துக் கணக்கு வகையைச் சார்ந் ததாகும்.சொத்துக் கணக்கு வகைக்குரிய இரட்டைப் பதிவு விதிமுறைகளுக்கமைய வங்கிக் கணக்கில் கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படும். இங்கு வங்கி மீதியை அதிகரிப்பதில் தாக்கத்தை செலுத்தும் கொடுக்கல் வாங்கல்கள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன், வங்கி மீதி குறைவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களை வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்படும்.

வணிகத்தின் பெயரில் வங்கி நடைமுறைக் கணக்கினூடாக நிகழும் கொடுக்கல் வாங்கல்களை வணிக வங்கியானது பதிவு செய்யும் முறையினைக் கேட்டறிவோம்.

வணிகமொன்றினால் வங்கியின் நடைமுறைக்கணக்கினுடாக மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் வணிக வங்கியின் ஏடுகளில் வணிகத்தின் பெயரிலான கணக்கொன்றில் பதிவு செய்யப்படும். வணிகத்தின் சார்பில் வங்கியினால் பேணப்படும் கணக்கு வங்கிக்கு பொறுப்பு ஒன்றாகக் கருதப்படும். எனவே, வங்கியினூடாக வணிகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் பொறுப்புக் கணக்கிற்குரிய விதிகளுக்கமையவே அதனது ஏடுகளில் பதிவு செய்யப்படுகின்றன. இதற்கமைய வங்கி மீதியின் அதிகரிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களை வங்கியினால் வணிகத்தின் பெயரில் பேணப்படும் கணக்கில் செலவு வைக்கப்படும் அதேவேளை வங்கி மீதியில் குறைவினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள் அக்கணக்கில் வரவு வைக்கப்படும்.

நடைமுறையில் வங்கியினால் வணிகத்தின் பெயரிலான வங்கிக் கணக்கானது பின்வரும் முறையிலேயே தயாரிக்கப்படுகின்றது.

நடைமுறைக்கணக்கு

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| | ஆரம்ப மீதி (செலவு) | | | XXX |
| | காசு வைப்பு | | XXX | XXX |
| | காசோலை வைப்பு | | XXX | X XXX |
| | காசோலைகளுக்கான கொடுப்பனவு | XXX | | XXX |
| | நேரடி வைப்பு | | XXX | XXX |
| | வங்கிக் கட்டணம் | XXX | | XXX |
| | காசோலைக் புத்தகக் கட்டணம் | XXX | | XXX |

வணிகத்தினால் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் தொகைகள் வங்கியினால் வணிகத்தின் கணக்கில் செலவு வைக்கப்படும். அதே வேளை வணிகத்தினால் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்படும் தொகைகள் வங்கியினால் வணிகத்தின் கணக்கில் வரவு வைக்கப்படும். இறுதியில் வணிகத்தின் ஏடுகளில் வங்கிக் கணக்கில் வரவு மீதியொன்று காணப்படும்போது வங்கியின் ஏடுகளில் வணிகத்தின் பெயரிலான கணக்கில் செலவு மீதியொன்று காணப்படும்.

## வங்கிக் கூற்று (Bank Statement)

வங்கி நடைமுறைக் கணக்கிற்கு உரித்துடைய ஒருவருக்கு வங்கியினால் பொதுவாக மாதத்திற்கு ஒருமுறை அனுப்பப்படும் கூற்று வங்கிக் கூற்று எனப்படும். இதில் குறித்த மாதத்தில் வங்கி நடைமுறைக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்ட வரவுகள், செலவுகள் உட்பட மீதியும் இதில் காட்டப்படும். பொதுவாக நடைமுறையில் குறித்த மாதத்தில் வங்கியினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய கணக்கின் கணினியில் தட்டச்சு செய்த பிரதியொன்றே வணிகத்திற்கு அனுப்பப்படுகின்றது. இவ்வாறு வங்கியினால் அனுப்பப்படும் அச்சிடப்பட்ட கூற்றுப் பிரதியே ‘‘**வங்கிக் கூற்று**’’ அதாவது கணக்குக் கூற்று என அழைக்கப்படும்.

வங்கிக் கூற்றின் மாதிரியொன்று பின்வருமாறு காணப்படும். அதில் கவனஞ் செலுத்துவோம்.

STATEMENT OF ACCOUNT MR [illegible]
**NAOTUNNA STORES KEKANADURA 81020**

Branch Name / Code [illegible] **CITY BRANCH**
Account Number [illegible]

Date **30/08/2013**
Currency **LKR**

| Date | Particulars | | Payments | Receipts | Balance |
|---|---|---|---|---|---|
| 31/07 | BALANCE B/F | | | | 34,654.10DR |
| 01/08 | CASH DEPOSIT | | .00 | 13,000.00 | 21,654.10DR |
| 01/08 | ACH CLR | 0174024 | 39,000.00 | .00 | 60,654.10DR |
| 02/08 | CASH DEPOSIT | | .00 | 10,000.00 | 50,654.10DR |
| 05/08 | CASH DEPOSIT | | .00 | 7,000.00 | 43,654.10DR |
| 06/08 | ACH CLR | 0174023 | 20,800.00 | .00 | 64,454.10DR |
| 06/08 | CASH DEPOSIT | | .00 | 9,000.00 | 55,454.10DR |
| 07/08 | CASH DEPOSIT | | .00 | 5,000.00 | 50,454.10DR |
| 08/08 | CASH DEPOSIT | | .00 | 5,000.00 | 45,454.10DR |
| 12/08 | CASH DEPOSIT | | .00 | 5,000.00 | 40,454.10DR |
| 13/08 | CASH DEPOSIT | | .00 | 12,000.00 | 28,454.10DR |
| 14/08 | CASH DEPOSIT | | .00 | 29,000.00 | 545.90 |
| 15/08 | CHQ BOOK CHARGES | | 375.00 | .00 | 170.90 |
| 22/08 | CASH DEPOSIT | | .00 | 12,000.00 | 12,170.90 |
| 23/08 | ACH CLR | 0182330 | 25,000.00 | .00 | 12,829.10DR |
| 23/08 | CASH DEPOSIT | | .00 | 13,000.00 | 170.90 |
| 26/08 | CASH DEPOSIT | | .00 | 10,000.00 | 10,170.90 |
| 27/08 | ACH CLR | 0182327 | 4,000.00 | .00 | 6,170.90 |
| 27/08 | CASH DEPOSIT | | .00 | 10,000.00 | 16,170.90 |
| 27/08 | ACH CLR | 0182329 | 9,595.00 | .00 | 6,575.90 |
| 29/08 | ACH CLR | 0182334 | 5,400.00 | .00 | 1,175.90 |
| 30/08 | CASH DEPOSIT | | .00 | 10,000.00 | 11,175.90 |
| 30/08 | OD CHG SYS-GENERATED | | 425.79 | .00 | 10,750.11 |
| 30/08 | BALANCE C/F | | | | 10,750.11 |
| | **TOTAL UNREALIZED CHEQUES** | | | | **.00** |
| | **TOTAL DEPOSITS** | **14 items** | | **150,000.00** | |
| | **TOTAL WITHDRAWALS** | **7 items** | **104,595.79** | | |

END OF STATEMENT

For clarifications if any, please contact the Branch Manager on 041 2222218

All the transactions shown on the statement should be verified and the Bank notified of any discrepancy immediately.
Any query relating to transactions beyond 03 months may be subject to levy of a fee.
Unrealised cheque deposits, if any are included in the Closing balance.

வங்கிக் கூற்று மாதிரி

வணிகத்தின் மூலம் தயாரிக்கப்படும் வங்கிக் கணக்கைச் சமப்படுத்தும்போது அதனது வங்கிக் கணக்கில் காணப்படும் மீதியினை அறிந்து கொள்ள முடியும். வங்கியினால் அனுப்பப்படும் வங்கிக் கூற்றில் வங்கியினது ஏடுகளுக்கமைய வணிகத்திற்கு உரித்தான கணக்கின் மீதி காட்டப்படும். பொதுவாக, இவ்விரு வங்கி மீதிகளும் சமமானவையாகக் காணப்பட வேண்டும். எனினும் நடைமுறையில் வணிகத்தின் ஏடுகளில் வங்கிக் கணக்கில் காட்டப்படும் மீதிக்கும் வங்கிக் கூற்றில் காட்டப்படும் வங்கி மீதிக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட முடியும். குறித்த காலப்பகுதியினுள் வணிகத்தின் ஏடுகளில் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள சில விடயங்கள் வங்கிக் கூற்றில் பதிவு செய்யப்படாது இருப்பதும் வங்கிக் கூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள சில விடயங்கள் வணிகத்தின் ஏட்டிலுள்ள வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படாதிருப்பதுமே இவ்வாறு மீதிகள் வேறுபடுவதற்கான பிரதான காரணங்களாகும்.

## வங்கிக் கணக்கு இறுதி மீதியும் வங்கிக் கூற்று இறுதி மீதியும் வேறுபடுவதற்குரிய காரணங்கள்

### 01. காசோலைகள் வழங்கப்பட்டதாயினும் இதுவரையில் வங்கியில் சமர்ப்பிக்கப்படாதவை (மாற்றப்படாத காசோலைகள்)

வணிகத்தினால் வழங்கப்பட்ட காசோலைகள் வணிகத்தின் ஏட்டிலுள்ள வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்படும். இவ்வாறு செய்யும்போது வணிகத்தின் ஏடுகளில் வங்கிக் கணக்கு மீதியானது குறைந்திருக்கும். இவ்வாறு வழங்கப்பட்ட காசோலைகளிற் சில குறித்த காலப்பகுதியில் காசோலையைப் பெற்றுக் கொண்டவர்களால் வங்கியில் சமர்ப்பித்துப் பணத்தைப் பெற்றுக் கொள்ளாதிருக்க முடியும். வழங்கப்பட்டதாயினும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் என இவற்றை இனங்காட்ட முடியும். இவ்வாறான காசோலைகளுக்கு வங்கி பணம் செலுத்தாதிருப்பதனால் வங்கிக் கூற்றில் இவை பதியப்படாதிருக்கும்.



இதன் காரணமாக வணிகத்தின் வங்கிக் கணக்கில் காட்டப்படும் மீதியானது வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதியை விடக் குறைவானதாக இருக்கும்.

### 02. வைப்பிலிடப்பட்டதாயினும் இதுவரையில் வசூலிக்கப்படாத காசோலைகள் (கைத்தேறாத காசோலைகள்)

வணிகத்திற்குக் கிடைக்கப் பெற்ற காசோலைகள் வங்கியில் வைப்பிலிடப்படும்போது அவை வணிகத்தினால் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். இதனால் வணிகத்தின் ஏடுகளில் காணப்படும் வங்கி மீதியானது அதிகரிக்கும். அவ்வாறு வைப்பிலிடப்பட்ட காசோலைகளிற் சில அக்காலப்பகுதியினுள் வசூலிக்கப்படாத அதாவது தேறாதவைகளாக இருக்க முடியும். காசோலைகளின் தேறல் என்பது காசோலையில் குறிப்பிடப்பட்ட தொகையானது வங்கியில் இருக்கும் நடைமுறைக் கணக்கின் தொகையுடன் சேர்க்கப்பட்டிருப்பதையே குறிக்கும்.

காசோலைகளை வங்கியில் வைப்பிலிடும்போது அதன் தொகையைக் கணக்கில் சேர்ப்பதற்காகச் சில நாட்கள் தேவைப்பட முடியும். எனவே, குறித்த கால இறுதியின் போது வணிகத்தினால் வைப்பிலிடப்பட்ட சில காசோலைகளின் பெறுமானங்கள் வங்கியில் பதிவு செய்யப்படாதிருக்கும்.வைப்பிலிட்டதாயினும் தேறாத காசோலை கள் என இவற்றைக் கருத முடியும்.இதனால் வங்கியில் வைப்பிட்டாலும் தேறாத காசோலைகள் வங்கிக் கூற்றில் பதியப்பட்டிருக்காது.



எனவே வணிகமொன்றின் வங்கிக் கணக்கில் காட்டப்படும் மீதியானது வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதியை விட அதிகமாக இருக்கும்.

## 03. நேரடி வைப்புக்கள்

சில வாடிக்கையாளர்கள் வணிகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகைகள் நேரடியாக வணிகத்தின் நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறே வணிகத்திற்குக் கிடைக்கவேண்டிய வாடகை, வட்டி, பங்குலாபம் போன்றன நேரடியாக வங்கி நடைமுறைக்கணக்கிற்கு அனுப்பப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இவற்றினை நேரடி வைப்புக்கள் என அழைக்கப்படும். இவ்வாறான நேரடி வைப்புகள் தொடர்பான விபரங்களை வங்கிக்கூற்று கிடைத்ததன் பின்னரே அறிந்து கொள்ளமுடியும். இவ்வாறான நேரடி வைப்புகள் வங்கிக் கூற்றில் பெறுவனவுகள் (செலவு) எனப் பதியப்பட்டாலும் வணிகத்தின் வங்கிக் கணக்கில் பதியப்படாதிருக்கும்.



எனவே வணிகத்தின் வங்கிக் கணக்கில் காட்டப்படும் மீதியானது வங்கிக் கூற்றில் காணப்படும் மீதியை விடக் குறைவாக இருக்கும்.

## 04. நிலையியற் கட்டளையின் பெயரிலான கொடுப்பனவுகள்

வணிகத்தினால் செலுத்த வேண்டிய வங்கிக் கடன் தவணைக் கட்டணம், குத்தகைத் தவணைக்கட்டணம், காப்புறுதிக் கட்டணம் போன்ற சில கொடுப்பனவுகளை வங்கியில் தனது கணக்கில் காணப்படும் பண மீதியிலிருந்து செலுத்தவும் என கணக்குரிமையாளரினால் எழுத்து மூலம் வங்கிக்கு அறிவித்தல் கொடுப்பதையே நிலையியற் கட்டளை என்றழைக்கப்படும். இவ்வாறான கட்டளைக்கு அமைய செலுத்துவதனையே நிலையியற் கட்டளைக் கொடுப்பனவு என்று அழைக்கப்படும். இவ்வாறான அறிவித்தல்களை வழங்குவதன் அடிப்படையில் வங்கியினால் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளது என்பதை வணிகத்திற்கு வங்கிக் கூற்று கிடைத்ததன் பின்னரே அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. நிலையியற் கட்டளையின் பெயரில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அப்பெறுமானம் வங்கி நடைமுறைக் கணக்கில் குறைக்கப்(வரவு வைக்கப்)படும். இவ்வாறான நிலையில் வங்கிக் கூற்றில் நிலையியற் கட்டளையின் பெயரிலான கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டிருப்பினும் வணிகத்தின் வங்கிக் கணக்கில் அப்பெறுமானங்கள் செலவு பக்கத்தில் பதியப்படாதிருக்கும்.



எனவே வணிகத்தின் வங்கிக் கணக்கில் காட்டப்படும் மீதியானது வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதியை விடக் கூடிய பெறுமானத்தைக் கொண்டிருக்கும்.

## 05. வங்கிக் கட்டணங்களும் காசோலை கட்டணங்களும்

நடைமுறைக் கணக்குரிமையாளருக்கு வங்கியினால் வழங்கப்படும் சேவை களுக்காக வங்கியினால் நடைமுறைக்கணக்கிலிருந்து அறவிட்டுக் கொள்ளும் கட்டணங்களே வங்கிக் கட்டணங்களாகும். இதேபோன்று வங்கி வழங்கும் காசோ லைப் புத்தகங்களுக்காக அறவிட்டுக் கொள்ளும் கட்டணம் காசோலைப் புத்தகக் கட்டணமாகும். வணிகத்திற்கு வங்கிக் கூற்று கிடைத்ததன் பின்னரே இவ்வாறான கட்டணங்கள் தொடர்பான விபரங்களை அறிந்துகொள்ளமுடியும். இவ்வாறு அறவிடப்பட்ட கட்டணங்களை வங்கிக் கூற்றின் கொடுப்பனவுகள் என (வரவு நிரலில்) பதியப்பட்டிருக்குமாயினும் வணிகத்தின் வங்கிக் கணக்கில் குறித்த காலம் முடியும் வரையில் இவை தொடர்பான விபரங்கள் பதியப்படாதிருக்கும்.



எனவே வணிகத்தின் வங்கிக் கணக்கில் காட்டப்படும் மீதியானது வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதியை விடக் கூடிய பெறுமானத்தைக் கொண்டிருக்கும்.

மேற்காட்டிய முறையில் வணிகத்தின் ஏடுகளில் உள்ள வங்கிக் கணக்கின் இறுதி மீதிக்கும் வங்கிக் கூற்றில் காட்டப்படும் இறுதி மீதிக்கும் இடையே வேறுபாடு காணப்பட முடியும்.

வணிகத்தினது வங்கிக் கணக்கினையும் வங்கியினால் அனுப்பப்படும் வங்கிக் கூற்றினையும் ஒப்பிடுவதன் மூலமே மேற்காட்டிய வேறுபாடுகளை இனங்காண முடியும். இதற்கமைய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்கும்போது முதலாவதாக வங்கிக் கணக்கினையும் வங்கிக் கூற்றினையும் ஒப்பிட்டு வேறுபாட்டை ஏற்படுத்திய காரணங்களை இணங்காணுதல் வேண்டும்.

இதற்காக

- வங்கிக் கணக்கின் வரவு நிரலை வங்கிக் கூற்றின் செலவு நிரலுடனும்
- வங்கிக் கணக்கின் செலவு நிரலை வங்கிக் கூற்றின் வரவு நிரலுடனும் ஒப்பிடுதல் வேண்டும்.

இங்கு வங்கிக் கணக்கிலுள்ள தொகைகள் ஒவ்வொன்றிலும் கவனஞ் செலுத்தி, அவை வங்கிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதைப் பரீசீலனை செய்தல் வேண்டும். அவ்வாறு வங்கிக் கணக்கு, வங்கிக் கூற்று ஆகிய இரண்டிலும் பதிவு செய்யப்பட்டுள்ள

தொகைகள் அடையாளமிடுதல் வேண்டும். இவ்வாறு அடையாளமிடப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள அடையாளமிடப்படாத கொடுக்கல் வாங்கல்களின் தொகைகளே இறுதி மீதிகளின் வேறுபாட்டுக்குரிய காரணங்களாகக் கருதப்படும்.

பின்வரும் பயிற்சியை நோக்குவதன் ஊடாக இது தொடர்பான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வது இலகுவானதாக இருக்கும்.

உதாரணம் :-

இராணி வணிகத்தின் 20XX ஜுலை மாதத்திற்கான வங்கிக் கணக்கு வங்கிக் கூற்று என்பன பின்வருமாறு.

வரவு வங்கிக் கணக்கு செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை ரூ | திகதி | விபரம் | பே ப | தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 20XX.07.01 | மீ.கீ.கொ.வ | | 15 000 | 20XX.07.06 | கடன்கொடுனர் இல (112) | | 10 000 |
| 07.05 | காசு வைப்பு | | 8 000 | 07.18 | கடன்கொடுனர் இல (113) | | 4 000 |
| 07.12 | காசோலை வைப்பு (65) | | 12 000 | 07.23 | கடன்கொடுனர் இல (114) | | 16 000 |
| 07.13 | காசோலை வைப்பு(46) | | 5 000 | 07.31 | மீ.கீ.கொ.செ | | 31 000 |
| 07.20 | காசு வைப்பு | | 7 000 | | | | |
| 07.28 | காசோலை வைப்பு இல (58) | | 14 000 | | | | |
| | | | 61 000 | | | | 61 000 |
| 08.01 | மீ.கீ.கொ.வ | | 31 000 | | | | |

20XX ஜுலை மாதத்திற்கான வங்கிக் கூற்று

| திகதி | விபரம் | வரவு ரூ | செலவு ரூ | மீதி ரூ |
|---|---|---|---|---|
| 20XX.07.01 | மீ.கீ.கொ.வ | | | 15 000 |
| 07.05 | காசு | | 8 000 | 23 000 |
| 07.07 | காசோலை 112 | 10 000 | | 13 000 |
| 07.15 | காசோலை 65 | | 12 000 | 25 000 |
| 07.16 | காசோலை 46 | | 5 000 | 30 000 |
| 07.18 | கடன்பட்டோர் நேரடி வைப்பு | | 11 000 | 41 000 |
| 07.20 | காசு வைப்பு | | 7 000 | 48 000 |
| 07.22 | காசோலை - 113 | 4 000 | | 44 000 |
| 07.25 | நிலையியல் கட்டளை(வங்கித் தவணைக்கட்டணம்) | 18 000 | | 26 000 |
| 07.31 | வங்கிகட்டணம் | 3 000 | | 23 000 |

மேற்காட்டிய உதாரணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு

20XX.07.31 ஆம் திகதியில் வணிகத்தின் வங்கிக் கணக்கில் அனுகூலமான மீதி ரூ. 31 000 ஆகக் காணப்படுகின்றது.

20XX.07.31 ஆம் திகதியில் வங்கிக் கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதி ரூ. 23 000மாகும்.

இரு மீதிகளுக்கிடையிலான பெறுமானங்கள் ஒன்றிற்கொன்று வேறுபட்டிருப்பதனால் வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிதல் வேண்டும். அது பின்வருமாறு காணப்படும்.

வரவு வங்கிக் கணக்கு செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை. ரூ | திகதி | விபரம் | பே ப | தொகை. ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 20XX.07.01 | மீ.கீ.கொ.வ | | 15 000 ✓ | 20XX.07.06 | கடன்கொடுனர் இல 112 | | 10 000 ✓ |
| 07.05 | காசு வைப்பு | | 8 000 ✓ | 07.18 | கடன்கொடுனர் இல 113 | | 4 000 ✓ |
| 07.12 | காசோலைவைப்பு (65) | | 12 000 ✓ | 07.23 | கடன்கொடுனர் இல 114 | | 16 000 |
| 07.13 | காசோலைவைப்பு (46) | | 5 000 ✓ | 07.31 | மீ.கீ.கொ.செ | | 31 000 |
| 07.20 | காசு வைப்பு | | 7 000 ✓ | | | | |
| 07.28 | காசோலை இல (58) | | 14 000 | | | | |
| | | | 61 000 | | | | 61 000 |
| 08.01 | மீ.கீ.கொ.வ | | 31 000 | | | | |

20XX ஜுலை மாதத்திற்கான வங்கிக் கூற்று

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 20XX.07.01 | மீ.கீ.கொ.வ | | | 15 000 |
| 07.05 | காசு | | 8 000 ✓ | 23 000 |
| 07.07 | காசோலை 112 | 10 000 ✓ | | 13 000 |
| 07.15 | காசோலை 65 | | 12 000 ✓ | 25 000 |
| 07.16 | காசோலை 46 | | 5 000 ✓ | 30 000 |
| 07.18 | நேரடி வைப்பு கடன்பட்டோர் | | 11 000 | 41 000 |
| 07.20 | காசு வைப்பு | | 7 000 ✓ | 48 000 |
| 07.22 | காசோலை 113 | 4 000 ✓ | | 44 000 |
| 07.25 | நிலையியற் கட்டளை (பங்கு கடன் தவணைக் கட்டணம்) | 18 000 | | 26 000 |
| 07.31 | வங்கிக் கட்டணம் | 3 000 | | 23 000 |

மீதிகளுக்கிடையிலான வேறுப்பாட்டிற்கான காரணங்கள்

**01. வங்கிக் கணக்கின் வரவுப்பக்கத்துடன் வங்கிக் கூற்றின் செலவு நிரலை ஒப்பிடும் பொழுது**

- வைப்பிலிடப்பட்டதாயினும் வசூலிக்கப்படாத காசோலை (58) ரூ.14 000
- வங்கிக்கு நேரடியாகக் கிடைக்கப் பெற்ற கடன்பட்டோர் நேரடி வைப்பு ரூ. 11 000

**02. வங்கிக் கணக்கின் செலவுப்பக்கத்தை வங்கிக் கூற்றின் வரவு நிரலுடன் ஒப்பிடும் பொழுது**

- வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை (114) ரூ. 16 000

- வங்கிக் கணக்கில் பதிவுசெய்யப்படாத நிலையியற் கட்டளையின் பெயரிலான கொடுப்பனவுகள் (வங்கிக் கடன் தவணைக் கட்டணம்) ரூ. 18 000
- வங்கிக் கணக்கில் பதிவுசெய்யப்படாத ஆனால் வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூ. 3 000

இவ்வேறுபாட்டினை சீராக்கஞ்செய்து வங்கி மீதிகளை ஒப்பிடுவதற்காக இருபடி முறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

- வணிகத்தினது வங்கிக் கணக்கு மீதியை சீராக்கஞ்செய்தல்.
- சீராக்கப்பட்ட வங்கி மீதியைப் பயன்படுத்தி வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரித்தல்.

### வங்கிக் கணக்கு மீதியைச் சீராக்கஞ்செய்தல்

வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதிக்கும் வங்கிக் கூற்று மீதிக்குமிடையே வேறுபாட்டினை ஏற்படுத்தும் காரணங்களுள் சில காரணங்கள் வங்கிக் கணக்கில் வழு அல்லது விடுபடுதல் போன்றவைகளால் ஏற்பட முடியும். இவ்வாறான தவறுகள் காரணமாக வங்கிக் கணக்கில் உள்ள மீதியில் வழுக்கள் ஏற்படுவது இயல்பாகும். எனவே அம்மீதியினை திருத்துதல் வேண்டும். அவ்வாறு திருத்தஞ் செய்தல் **வங்கிக் கணக்கு மீதிச் சீராக்கம்** என அழைக்கப்படும்.

மேற்காட்டிய உதாரணத்திற்கமைய பின்வரும் காரணங்களுக்கான பெறுமானங்கள் வங்கிக் கூற்றில் சீராக்கப்படல் வேண்டும்.

01. நேரடி வைப்புக்கள் (கடன்பட்டோர் நேரடியாக வைப்பிலிடுதல்)
02. நிலையியற் கட்டளையின் பெயரிலான கொடுப்பனவுகள் (வங்கிக் கடன் தவணைக் கட்டணம்)
03. வங்கியினால் அறவிடப்பட்ட சேவைக் கட்டணங்கள்



நேரடி வைப்புக்கள் மூலம் வங்கிக் கணக்கு மீதி அதிகரிக்கும். இதனால் நேரடி வைப்புக்கள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

நிலையியற் கட்டளையின் பெயரில் இடம்பெற்ற கொடுப்பனவுகள், வங்கியினால் அறவிடப்பட்ட கட்டணங்கள் என்பன காரணமாக வங்கி மீதியானது குறைவடையும். எனவே வங்கிக் கணக்கில் நிலையியற் கட்டளையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், வங்கியினால் அறவிடப்பட்ட கட்டணம் என்பன செலவு வைக்கப்படும்.

மேற்காட்டிய முறையில் சீராக்கங்களை மேற்கொண்ட பின்னர் சீராக்கப்பட்ட வங்கி மீதி பெறப்படும்.

வழங்கப்பட்டுள்ள உதாரணத்திற்கமைய வங்கிக் கணக்கு சீராக்கப்படும் முறையினைப் பின்வருமாறு காட்ட முடியும்.

வரவு வங்கிக் கணக்கு(சீராக்கப்பட்ட) செலவு

| திகதி | விபரம் | பே ப | தொகை ரூ | திகதி | விபரம் | பே ப | தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 20XX.07.01 | மீ.கீ.கொ.வ | | 31 000 | 20XX.07.25 | வங்கிக்கடன் தவணைக் கட்டணம் | | 18 000 |
| 07.18 | நேரடி வைப்பு (கடன்பட்டோர்) | | 11 000 | 0731 | வங்கிக்கட்டணம் | | 3 000 |
| | | | | | மீ.கீ.கொ.செ | | 21 000 |
| | | | 42 000 | | | | 42 000 |
| | மீ.கீ.கொ.வ | | 21 000 | | | | |

சீராக்கப்பட்ட வங்கிக் கணக்கு மீதியைப் பயன்படுத்தி வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரித்தல்.

வங்கி மீதிகளில் வேறுபாட்டை ஏற்படுத்திய காரணங்களிலிருந்து சீராக்கப்பட்ட வங்கிக் கணக்கு மீதியைக் கணித்த பின்னர் பின்வரும் காரணங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

- வைப்பிலிடப்பட்டதாயினும் வசூலிக்கப்படாத காசோலைகளின் தொகைகள்.
- வழங்கப்பட்டதாயினும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் தொகைகள்.

மேற்கூறிய இரு காரணங்களும் வழுக்கள் அல்லது விடுபாடுகள் அல்ல. ஆகையால், இவ்விரு காரணங்களும் வங்கிக் கணக்கில் சீராக்கஞ் செய்யப்படவில்லை.

எனவே, எஞ்சியுள்ள இவ்விரு விடயங்களை உள்ளடக்கி வங்கிக் கணக்கின் சீராக்கப்பட்ட மீதியை வங்கிக் கூற்று மீதியுடன் ஒப்பிட்டறிவதற்காக இணக்கக் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.இதுவே வங்கிக் கணக்கிணக்கக் கூற்று என்று அழைக்கப்படும்.
இதற்கமைய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிப்பதன் மூலம் வங்கி மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இதற்கமைவாக,



வழங்கப்பட்டதாயினும் அக்கால வரையறையினுள் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் இருப்பதனால் வங்கிக் கூற்றில் காணப்படும் மீதியை விட வங்கிக் கணக்கு மீதியானது குறைவாக இருக்கும். எனவே வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை வங்கிக் கணக்கில் சீராக்கப்பட்ட மீதியுடன் கூட்டுதல் வேண்டும்.

வைப்பிலிடப்பட்டதாயினும் குறித்த காலப்பகுதியினுள் வசூலிக்கப்படாத காசோலைகளும் இருப்பதனால் வங்கிக் கணக்கு மீதியானது வங்கிக் கூற்று மீதியை விட அதிகமாக இருக்கும். எனவே சீராக்கப்பட்ட மீதியிலிருந்து வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமானங்களைக் கழித்தல் வேண்டும்.

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கும்பொழுது வங்கிக் கூற்றில் குறிப்பிடப்படும் மீதி பெறப்படும்.

வழங்கப்பட்டுள்ள உதாரணத்தின்படி சீராக்கப்பட்ட வங்கி மீதியைப்பயன்படுத்தி வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைப் பின்வருமாறு தயாரிக்க முடியும்.

இராணி வணிகத்தின்
20XX ஜீலை மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று பின்வருமாறு

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| சீராக்கப்பட்ட வங்கி மீதி | | 21 000 |
| கூட்டு : | | |
| வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை (114) | 16 000 | 16 000 |
| | | 37 000 |
| கழி : | | |
| வசூலிக்கப்படாத காசோலை (58) | 14 000 | 14 000 |
| 20XX.07.31 ஆம் திகதியிலான வங்கிக் கூற்று மீதி | | 23 000 |

இதற்கமைய வணிகமொன்றின் யாதேனும் காலப்பகுதிக்குரிய வங்கிக் கணக்கு மீதியுடன் வங்கிக் கூற்று மீதி சமப்படாதிருப்பின் அம்மீதிகளை ஒப்பிடுவதற்காக பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகளைக் கீழே காட்டப்பட்டுள்ளவாறு சுருக்கமாகக் குறிப்பிட முடியும்.

- வணிகத்தின் வங்கிக் கணக்கின் இறுதி மீதிக்கும் வங்கிக் கூற்றில் உள்ள இறுதிமீதிக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றனவா என்பதைக் கண்டறி தல்.
- வங்கி மீதிகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுமாயின் வங்கிக் கணக் கினையும் வங்கிக் கூற்றினையும் ஒப்பிட்டு அவ்வேறுப்பாட்டிற்குரிய காரணங்களை அறிந்துக் கொள்ளல் வேண்டும்.
- வணிகத்தின் வங்கிக் கணக்கின் இறுதி மீதியினைச் சீராக்கம் செய்தல்.
- சீராக்கப்பட்ட வங்கி மீதியினைப் பயன்படுத்தி வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரித்தல்.



## செயற்பாடு 03

கதிரேசன் வணிகத்தின் 20XX ஜுலை மாதத்தின் வங்கிக் கணக்கில் அனுகூலமான மீதியாக ரூ. 45 000 காணப்பட்டது. வங்கிக் கூற்று வேறு மீதியைக் காட்டியது. வேறுபாட்டிற்குரிய காரணங்கள் பின்வருமாறு

01. வைப்பிலிடப்பட்ட பின்வரும் காசோலைகள் 20XX-07-31 வரையில் தேறாதவைகளாக இருந்தன.

| | |
|---|---|
| காசோலை இலக்கம் 48 | ரூ. 7 500 |
| காசோலை இலக்கம் 94 | ரூ. 8 600 |

02. வழங்கப்பட்ட பின்வரும் காசோலைகள் 20XX-07-31 வரையில் வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | |
|---|---|
| காசோலை இலக்கம் 45 | ரூ. 11 400 |
| காசோலை இலக்கம் 49 | ரூ. 8 600 |

03. வங்கிக் கூற்றில் காணப்பட்ட பின்வரும் விடயங்கள் வணிகத்தின் வங்கிக் கணக்கில் காணப்படாதிருந்தன.

நிலையியற் கட்டளையினடிப்படையில் வங்கியின் மூலம் செலுத்திய காப்புறுதித் தவணைக் கட்டணம் ரூ. 8 000

வங்கிக்கு நேரடியாகச் செலுத்தப்பட்ட முதலீட்டு வருமானம் ரூ. 4200
வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூ. 2500

01. வங்கிக் கணக்கைச் சீராக்குதல் (திருத்திய காசேடு)
02. வங்கிக் கணக்கின் சீராக்கப்பட்ட மீதியைப் பயன்படுத்தி வங்கிக் கூற்றின் 20XX-07-31 ஆம் திகதியன்று உள்ளவாறான மீதியை அறிவதற்கு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கவும்.

## செயற்பாடு 04

சியாம் வணிகத்தின் 20XX-05-31 ஆம் திகதியில் பெயர்த்தெடுக்கப்பட்ட வங்கிக் கணக்கும் வங்கியினால் அவருக்கு அனுப்பப்பட்ட வங்கிக்கூற்றும் பின்வருமாறு.

**வங்கிக் கணக்கு**

| திகதி | விபரம் | தொகை ரூ | திகதி | விபரம் | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 20XX.05.01 | மீதி.கீ.கொ.வ | 16 000 | 20XX.05.04 | காசோலை வழங்கல் | |
| 05.06 | காசு | 20 000 | 05.09 | சம்பளம் (501) | 8 500 |
| 05.12 | காசோலைவைப்பு142 | 14 000 | 05.18 | கடன் கொடுனர்(502) | 17 500 |
| 05.24 | காசோலை வைப்பு234 | 15 000 | 05.26 | வாடகை (503) | 9 000 |
| 05.29 | காசோலைவைப்பு184 | 18 000 | | கொள்வனவு (505) | 12 000 |
| | | | 05.27 | கடன்கொடுனர் (506) | 17 000 |
| | | | 05.31 | மீதி.கீ.கொ.செ | 19 000 |
| | | 83 000 | | | 83 000 |
| 06.01 | மீதி.கீ.கொ.வ | 19 000 | | | |

**வங்கிக்கூற்று**

சியாம் மொகமட் — மக்கள் வங்கி
இலக்கம்: 45 — வரகாபொல கிளை
வரகாபொல

| திகதி | விபரம் | வரவு ரூ | செலவு ரூ | மீதி ரூ |
|---|---|---|---|---|
| 20XX.05.01 | மீதி.கீ.கொ.வ | | | 16 000 |
| 20XX.05.06 | காசு வைப்பு | | 20 000 | 36 000 |
| 20XX.05.10 | காசோலை கொடுப்பனவு 501 | 8 500 | | 27 500 |
| 20XX.05.12 | காசோலை கொடுப்பனவு 503 | 17 500 | | 10 000 |
| 20XX.05.14 | காசோலை வைப்பு 142 | | 14 000 | 24 000 |
| 20XX.05.15 | நிலையியற் கட்டளை (வங்கிக்கடன்) | 19 000 | | 5 000 |
| 20XX.05.26 | காசோலை வைப்பு 234 | | 15 000 | 20 000 |
| 20XX.05.27 | நேரடிவைப்பு | | 8 000 | 28 000 |
| 20XX.05.28 | காசோலை கொடுப்பனவு 505 | 12 000 | | 16 000 |
| 20XX.05.30 | வங்கிக்கட்டணம் | 2 000 | | 14 000 |

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

01. 20XX.05.31 ஆம் திகதியில் மீதிகளின் வேறுப்பாட்டிற்குக் காரணமாய் அமைந்த விடயங்களை காட்டுதல்.

02. 20XX.05.31 ஆம் திகதியில் வங்கிக் கணக்கு மீதியினை சீராக்கம் செய்தல்.

03. சீராக்கப்பட்ட வங்கிக் கணக்கின் மீதியைப் பயன்படுத்தி வங்கிக் கணக்கிணக்க கூற்றைத் தயாரித்தல்.



## செயற்பாடு 05

வங்கியில் நடைமுறைக்கணக்கொன்றைப் பேணி மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கி பெறப்பட்ட வங்கிக் கணக்கு மீதியும் அதே வேளை வங்கியினால் 20XX மார்ச் மாதத்திற்கான வங்கிச் கூற்றொன்று உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது எனக் கருதிக் கொள்க. வங்கிக் கூற்றில் காட்டப்படும் இறுதி மீதியை விட உங்களால் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கின் இறுதி மீதியானது கூடிய பெறுமானத்தைக் கொண்டுள்ளமை இனங்காணப்பட்டது.

01. வங்கிக் கணக்கு மீதிக்கும் வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதிக்குமிடையே வேறுபாடு காணப்படுவதற்குரிய காரணங்கள் எவையெனக் குறிப்பிடுக.

02. வங்கிக் கூற்று மீதியானது வங்கிக் கணக்கு மீதியை விட அதிகமாக இருப்பதாயின் அவ்வாறு ஏற்படுவதற்கு தாக்கஞ் செலுத்தக்கூடிய காரணங்களை மேலே குறிப்பிட்ட காரணங்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.